11. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) அம்பத்தூர் நகரியம் நகராட்சியாதல்.

எப்படியோ தவறி விட்டது. இருந்தாலும் அவர்களுக்கு வசதியாக இதனை இப்போது ஒத்தி வைத்து அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துப்படி இந்தச் சட்ட முன்வடிவு தள்ளி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1920) 4—பி பிரிவின் (1) உட்பிரிவிற்கிணங்க, செங்கை அண்ணா மாவட்டத்தில் தற்போதுள்ள அம்பத்தூர் நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச் சட்டப் பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) மின்சார வாரியத்தின் கடன் ஒரு சமயத்தில் 2,400 கோடி ரூபாய் இருக்கலாமென்ற செயற்குறிப்பை ஏற்றல்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக